## மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2024

| தரம் :- 12 (2025) | கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி – I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) **2** | 05) **3** | 09) **3** | 13) **3** | 17) **4** |
| 02) **1** | 06) **3** | 10) **2** | 14) **4** | 18) **1** |
| 03) **3** | 07) **5** | 11) **1** | 15) **1** | 19) **3** |
| 04) **5** | 08) **2** | 12) **1** | 16) **4** | 20) **4** |

(01 x 20 = 20 புள்ளிகள்)

### பகுதி – II

### பகுதி – I

*01)* (I) எகிப்து, சுமேரியா, அசீரியா, கிரேக்கம், உரோமை

(II)
- கலிலேயாப் பகுதி பாலஸ்தீனாவின் மிகச் செழுமை வாய்ந்த பகுதியாகும்.
- புதிய ஏற்பாட்டில் முக்கிய பங்கினை வகிக்கும்.
- கலிலேயாவினை கீழ் கலிலேயா, மேல் கலிலேயா என பிரிப்பர்
- பாலஸ்தீனாவில் காணப்படும் அதி உயர்ந்த மலைப்பகுதி மேல் கலிலேயாவில் உள்ளது.
- சிறிய குன்றுகள், செழிப்பான பகுதிகளும் கீழ் கலிலேயாவில் உள்ளது.

(III)
- மொசப்பத்தேமியா மக்களிடம் கடவுள் நம்பிக்கையானது அதிகம் காணப்பட்டது.
- கனவுகளிற்கு பலன் கூறும் பழக்கம் இவர்களிடம் காணப்பட்டது
- மாய சக்திகள் மூலம் நோய்களை குணமாக்கலாம் என நம்பிக்கை.
- பாரசீக குடாவில் கடலுடன் கலக்கும் யூப்ரட்டிஸ் தைகிரிஸ் என்ற நதி பகுதியிலேயே இந் நாகரிகம் தோற்றம் பெற்றது

(IV)
- சீனாய் மலையில் இறைவன் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்களுடன் ஓர் உடன்படிக்கையினை செய்து கொண்டார்
- இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாள் சீனாய் மலையில் பாளையம் இறங்கிய போது அங்கு இறைவெளிப்பாட்டை உணர்ந்தனர்.
- ஒரே கடவுளாகிய யாவேயை வழிபடவேண்டும் என்பதை இஸ்ராயேல் மக்கள் ஏற்றுக்கொண்டனர்
- அரச குருத்துவ தூய மக்களினமாக்கப்பட்டுள்ளார்
- உடன்படிக்கை பத்திரம் புனிதமான இடத்தில் பாதுகாப்பப்பட்டது.
- பல பண்புகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

(வி.ப. 19/4-6, 20 : 2)



kalvi.lk

(வி.ப 20 : 3, 23 : 33) (வி.ப 247)
வி.ப. 24. 9 -11

02) (I) நாசரேத்து, கானா, நயீன், கப்பநாகூம், திபேரியா, தாபோர்மலை, பெத்சாய்தா

(II)
- இயேசு அன்பு கூர்ந்த இலாசரும் அவரது சகோதர சகோதரிகளும் வாழ்ந்த இடம்.
- இலாசர் உயிர் பிரிந்தமை
- சீமோன் வீட்டில் உணவருந்தியமை
- பாவிப் பெண் இயேசுவின் காலடிகளை கழுவி நறுமணத் தைலம் பூசியமை

(III)
- செழிப்பு மிக்க மண், வாற் கோதுமை, கோதுமை மிலட் முதலிய தானியங்கள் வளர்ப்பதற்கு ஏற்றதாக அமைந்தது.
- ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்தே அரசனுக்கு கிடைத்தது என நம்பினர்
- அரசனே ஆன்மீக தலைவராகவும் இலௌகீக தலைவராகவும் விளங்கினார்
- அரசனின் கீழ் அமைச்சர்களும் சமயக் குருமாரும் இருந்தமை
- நிருவாகம், சமயம், பொருளாதாரம் என்ற வகையில ஆட்சிக்கடமைகள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.
- பைப்பிரஸ் புல் பயன்படுத்தப்பட்டன
- மரணத்தின் பின்பு வாழ்வு உண்டு என நம்பினர்.
  (பக்கம் 10) (ஆ.வழிகாட்டி)

(IV)
- உரோமர்கள் தம் தெய்வங்களுக்கும், வீரர்களுக்கும் விழா எடுத்தது போன்று கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களுக்கு சான்று பகர்ந்த விசுவாசிகளுக்கு விழா எடுத்தனர்
- உரோமர் டிசம்பர் 25ம் திகதி சூரியன் பிறந்த தின விழாவாக் கொண்டாடினர் அதனையே கி.பி 366 முதல் நீதியின் ஆதவனாக இயேசுவின் பிறந்த தினமாக கொண்டினர்.
- உரோமயை இலத்தீன் வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.
- மன்றாட்டு, நோன்பு நாட்கள் பவனிகள்
- உடைமரபுகள்
- வழிபாட்டில் முழந்தாளிடும் மரபு

03) (I) தெபோரா, ஒத்னியேல், கிதியோன், சிம்சோன், இப்தா, அபிமெலக்

(II)
- அன்னிய படையெடுப்புக்களில் இருந்து மக்களை மீட்டெடுத்தல்
- சமூகத்தில் நீதியை நிலைநாட்டல்
- சமூகத்தில் முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் தீர்த்தல்.
- அவர்களின் வாழ்நாளெல்லாம் உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக வாழ்தல்

(III)
- உள்நாட்டு கொள்கைகளுக்கு அதிக முக்கியத்தும் கொடுத்தல்
- 12 மாவட்டங்களாக பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆளுனரை நியமித்தமை.
- படைபலத்தினை பலப்படுத்தி எதிரிகளின் ஊடுருவலைத் தடுத்தல்.
- அரேபிய நாடுகளுடன் வணிகத் தொடர்பினை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாட்டிற்காக உழைத்தார்.
- கட்டடிடப்பணி மேற்கொண்டு நகரங்களை உருவாக்கினர்.


kalvi.lk

- சிறந்த இலக்கியங்கள் உரவாகின.
- நாட்டில் அமைதியை நிலை நாட்டினார்.

(IV)
- கிரேக்க பேரரசன் மகா அலெக்சாண்டர் கி.மு 333 இல் பாரசீக மன்னர் மூன்றாம் தாரியுசைத் தோற்கடித்து பின் யூதேயா, சமாரியா என்பன கிரேக்கர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.
- கிரேக்கர்கள் யூத சமய பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அவர்களுக்கு அனுமதியளித்தாலும் கிரேக்க கலாசார வாழ்க்கை முறை அவர்களை பாதித்தது.
- கலைக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், குளியல் அறைகள் கட்டிட முறைப்படி அமைக்கப்பட்டது.
- எகிப்திய தளபதி தொலமி எருசலேமைக் கைப்பற்றினார். இக்காலப்பகுதியில் பழைய ஏற்பாடு எகிப்திய கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- பரிசேயர், சதுசேயர் போன்ற சமயப் பிரிவில் தோன்றினர்.

  பக்கம் 40 ஆசிரியர் வழிகாட்டி

04) (I) ஒற்றுமை

- மனித சமூகத்தின் வளர்ச்சி நிலையினை குறிக்கிறது
- பண்பாடு ஒழுக்கம் சார்பான மதிப்பீட்டு நிலையில் நோக்கப்பட நாகரிகம் மனித வாழ்வின் எல்லைக்கூறுகளையும் உள்ளடக்கி அமைகிறது.
- ஒவ்வொரு இனத்திற்கும் உரியது
- மாறும் தன்மையும், வளரும் தன்மையும் கொண்டது
- ஒரே பொருளில் பொரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.

**வேற்றுமமை**

| பண்பாடு | நாகரிகம் |
|---|---|
| 1. ஒரு சமுகத்தின் நடை உடை பழக்கவழக்கத்துடன் தொடர்புடையது | வாழ்வின் எல்லைக்கூறுகளுடன் தொடர்புடையது |
| 2. அகலயமானது | புறலயமானது |
| 3. ஆன்மீகத்தன்மை உடையது | தேர்ந்திறன் பொருளுடன் தொடர்புடையதாகாது. |
| 4. நாகரிகத்திற்கு முன் தோன்றியது | பண்பாட்டிற்கு பின் தேன்றியது |
| 5. பழமை தன்மையினை வலியுறுத்தி நிற்கிறது. | புதுமைத் தன்மையினை வலியுறுத்தி நிற்கிறது. |

(II)
- நிறைகுடம் குத்துவிளக்கு
- பொட்டு வைத்தல், மாலை அணிதல்
- வேட்டி சால்லை, புடவை கட்டுதல்
- பாரம்பரிய பொருட்களாவன அலங்கார் உதாரணம் பனை ஓலை தென்னம் ஓலை
- பவனியின் போது விருத்தங்கள், பாடுதல்.
- ஆராத்தி எடுத்தல்
- விழாக்களின் போது நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றுதல் (பாரம்பரியத்துடன்)
- கிராமியப்பாடல்களை தழுவிய கிறிஸ்தவ பாடல்கள்



kalvi.lk

**05)** (I) **நொஸ்திக்கம்**

- இதனை முன்வைத்தவர்கள் ஞான மார்க்கத்தினர் என அழைப்பர்
- ஞான உணர்வுக் கொள்கை - அறிவு சார்ந்த மீட்புக் கொள்கை
- மனித வாழ்வின் முக்கிய விடயங்களை உள்ளடக்கியது
- இரு உலகு சார்ந்தது.

**பிளேற்றோனிசம்**

- கிரேக்க தத்துவஞானி பிளேற்றோ என்பரால் முன்வைக்கப்பட்டது.
- உண்மை உலகு சாயல் உலகு என இரண்டு உலகு உள்ளது.
- இவ்வுலகில் நாம் காண்பவை எல்லாம் உண்மை உலகின் சாயல்கள்

**ஸ்தோயிக்கம்**

- சீனோ என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- எந்தச் சூழ்நிலையிலும் இன்பத்தையும், துன்பத்தையும் ஏற்கும் மனநிலை
- எல்லா நிகழ்வுகளும் விதி என்னும் நியதியினால் நிர்ணயிக்கப்படுகிறது.

**அரிஸ்ரோட்டில்**

- அரிஸ்ரோட்டில் முன்வைத்த காரணகாரிய கொள்கைகள்
(பக்கம் 17 - 18) ஆசிரியர் வழிகாட்டி

(II) மொழி

- கி.மு 333 - கி.மு 63 வரையான காலப்பகுதியில் கிரேக்க மன்னன் அலெக்சாண்டரின் தலையின் கீழ் கிரேக்கரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க மொழி நன்கு அறிந்தவர்களாக இருந்தமை.
- செப்துவாஜித் மொழிபெயர்ப்பு
- யோவான் நற்செய்தியிலும் தூய பபுலின் திருமுகங்களது கிரேக்க மொழியின் தாக்கம் காணப்பட்டது.

**மெய்யியல்**

- புனித யோவான் நற்செய்தியின் முதல் அதிகாரம் வார்த்தை என்ற பதம் (லோகோஸ்) என்பது
- உண்மை உலகு மாயை உலகு
- ஒளி இருள்
- விண்ணகம், மண்ணகம்
- தூய பவுலின் திருமுகங்கள் ஒளியின் மக்கள் இருளின் மக்கள்
போன்ற விடயங்களுடன் தொடர்புடைய விடைகள்

06) (I)
- மேசேயை இஸ்ராயேல் மக்களை மீட்பதற்கான தேர்ந்தெடுத்த அவரை வளப்படுத்தி பயிற்றுவித்தமை
- மேகத்தூண், நெருப்புத்தூண் ஆக இருந்து மக்களை வழிநடத்தியமை
- செங்கடலை கடந்து சென்றமை



kalvi.lk

- காடை மன்னா, நீர்
- பத்துக்கட்டளை
- சீனாய் உடன்படிக்கை
- கடவுளின் பிள்ளைகள் - இஸ்ராயேலருக்கு
  ஒரே கடவுள் மாத்திரம்
- மேசேயின் ஊடாக செய்த அரும் செயல்கள்
- மோசே கடவுள் மீது கொண்டிருந்த நம்பிக்கை

(II)
- எம் ஒவ்வொருவரையும் திருமுழுக்கின் மூலம் பெயர் சொல்லி அழைத்துள்ளார்.
- கடவுள் மீது என்றும் நம்பிக்கை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- எம்மை பெற்றோர் வழியாக, அருட்தந்தையர்கள் அருட்சகோதரர்கள், ஆசிரியர்கள் வழியாக பாதுகாத்து வருகின்றார்.
- தொற்றுநோய் காலங்களில் எம்மோடு கூட வழிநடந்தார்.
- துன்பவேளையில் எம்மோடு துணையாக இருக்கிறார்
- அவரது பிரசன்னத்தினை நற்கருணையில் நாம் தினமும் காண்கின்றோம்.
- திருப்லிகள் வழியாக மறையுரைககள் வழியாக இன்றும் அருளடையாளங்கள் வழியாக எம்மை வழிநடத்தி விசுவாசத்தில் நிலைத்திட உதவி செய்கிறார்.
- அன்றாட உணவினை எமக்கு அருளுகின்றார்.
- ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிகளை எமக்கு காட்டியுள்ளார்.
  மேலும் பொருத்தமான விடைகள்

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page